**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம் இராமநாதபுரம்**

**முன்னிலை திரு. A. ஆதியான், B.A. B.L.**
நீதித்துறை நடுவர் எண்.2.
இராமநாதபுரம்.

**2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4–ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 19 ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 120/2018**

**CNR NO. TNRM02–001791–2018**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக, சார்பு ஆய்வாளர், கேணிக்கரை காவல் நிலையம் குற்ற எண். 126/2018 |

**1 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சுப்பிரமணியன் |
| 3. | த/பெ | : | கேசவன் |
| 4. | தொழில் | : | சிவில் இன்ஜினியர் |
| 5. | முகவரி | : | கம்பர் தெரு, இராமநாதபுரம் |
| 6. | வயது | : | 54/2026 |

**2 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | கோகுல கண்ணன் |
| 3. | த/பெ | : | கேசவன் |
| 4. | தொழில் | : | ரியல் எஸ்டேன் |
| 5. | முகவரி | : | கம்பர் தெரு, இராமநாதபுரம் |
| 6. | வயது | : | 49/2026 |

**3 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | லட்சுமி |
| 3. | க/பெ | : | கேசவன் |

| | | | |
|---|---|---|---|
| 4. | தொழில் | : | இல்லத்தரசி |
| 5. | முகவரி | : | கம்பர் தெரு, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம் |
| 6. | வயது | : | 80/2026 |

**4 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | மாரி |
| 3. | த/பெ | : | ஜெயராம் |
| 4. | தொழில் | : | இல்லத்தரசி |
| 5. | முகவரி | : | கம்பர் தெரு, இராமநாதபுரம் |
| 6. | வயது | : | 50/2026 |

**5 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | மீனாள் |
| 3. | க/பெ | : | வன்னியப்பன் |
| 4. | தொழில் | : | இல்லத்தரசி |
| 5. | முகவரி | : | கம்பர் தெரு, இராமநாதபுரம் |
| 6. | வயது | : | 42/2026 |

**(இவ்வழக்கின் 6 வது எதிரியை பொறுத்து இவ்வழக்கானது C.C. No.416/2023 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.)**

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 24.05.2018 |
| 8. | புகார் தேதி | : | 25.05.2018 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | இல்லை |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 1 முதல் 5 எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் CRL.8878/2018–ன் 13.05.2018 தேதிய உத்தரவுபடி முன் பிணையில் |

சென்றுள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 01.12.2018 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 07.10.2023 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 08.07.2026 |
| 14. | குற்றம் சாட்டப்பட்டது | : | 1 முல் 5 எதிரிகள் மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324, 506(ii)–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. |
| | குற்றம் வனையப்பட்டது | : | 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) r/w 149–ன் கீழும், 3 முதல் 5 எதிரிகள் இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324 r/w 149, 506 (ii)–ன் கீழும் குற்றசாட்டுகள் வனையப்பட்டது. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | எதிரிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்வதில் கால தாமதம் ஏற்பட்டது. அரசுத்தரப்பில் சாட்சிகளை ஆஜர் செய்ய காலதாமதம் ஏற்பட்டது. |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | : | |

| | | |
|---|---|---|
| அ.சா.1 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 16.10.2023<br>21.02.2024 |
| அ.சா.2 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 16.10.2023<br>21.02.2024 |
| அ.சா.3 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 16.10.2023<br>21.02.2024 |
| அ.சா.4 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 27.11.2023<br>27.11.2023 |
| அ.சா.5 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 27.11.2023<br>27.11.2023 |
| அ.சா.6 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 27.11.2023<br>27.11.2023 |
| அ.சா.7 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 06.02.2025<br>06.02.2025 |
| அ.சா.8 | முதல் விசாரணை<br>குறுக்கு விசாரணை | 16.06.2026<br>16.06.2026 |

| | | | |
|---|---|---|---|
| 17. | எதிரிகளிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 23.06.2026 |
| 18. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 19. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | கு.ப.ம.எண்.5998/2023 – அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளை எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக மீண்டும் வரவழைக்குமாறு வேண்டி தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த 27.11.2023–ம்தேதியன்று அனுமதிக்கப்பட்டது. |
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு. சொக்கேசன் |
| 22. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | திரு.S.J.ஷேக் இப்ராஹிம் |
| 23. | எதிரிகளின் கூற்று | : | எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 04.08.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 04.08.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டானது அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியதால் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 148, 294(b), 324. 506(ii) r/w 149–ன் கீழும், 3 முதல் 5 எதிரிகள் இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324 r/w 149, 506 (ii)–ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று கருதி, மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை விடுதலை செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) உ/இ BNSS பிரிவு 271(1)–ன் கீழ் |

இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகள் எழுதி கொடுத்த பிணைமுறியை ரத்து செய்யவும் இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

மேலும், இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால், வழக்கு சொத்துக்கள் குறித்த எந்த உத்தரவும் இல்லை.

இவ்வழக்கு கடந்த 01.12.2018ம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 08.07.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஏ.ரவிச்சந்திர ராமவன்னி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களைக் கேட்டறிந்தும், இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்த இவ்வழக்கில் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## <u>தீர்ப்புரை</u>

**<u>02) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் –</u>**

அரசு தரப்பு வழக்கானது கடந்த 24.05.2018ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் பயன்படுத்தி வந்த செப்டிக் டேங்கை மூடுவதற்காக ஏற்கனவே கிடந்த மண்ணை எடுத்து ஆட்களை வைத்து வேலை செய்துக்கொண்டிருந்த போது 1 முதல் 6 எதிரிகள் அனைவரும் நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து தகாத கெட்ட வார்த்தைகளால் பேசியுள்ளார்கள். அதன் பின்னர் 1 மற்றும் 2 எதிரிகள் வாதியை பார்த்து இந்த தேவடியா மகன் எங்கள் முன் வரக்கூடாது என கூறி 1வது எதிரி அருகில் கிடந்த உடைந்த குழவி கல்லை எடுத்து நிகழ்நிலை

புகார்தாரரை நோக்கி ஓங்கி எரிந்து போது அது வாதியின் உச்சி தலையில் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 2 வது எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து நிகழ்நிலை புகார்தாரரை நோக்கி எறிந்ததில் நிகழ்நிலை புகார்தாரரின் முதுகு, மார்பு ஆகிய இடங்களில் பட்டு வீக்க காயம் ஏற்பட்டுள்ளது. 3 முதல் 6 எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து தேவடியா மகனே நீ இனிமேல் இங்கு வந்தால் கல்லை தூக்கி தலையில் போட்டு கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள். மேற்படி சம்பவம் தொடர்பாக நிகழ்நிலை புகார்தாரர் கொடுத்த புகாரின்பேரில் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324, 506(ii)–ன் கீழ் குற்ற எண். 126/2018 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்பு இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324, 506 (ii)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03)** குற்ற இறுதியறிக்கையை பரிசீலனை செய்து எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு ஆண்டுபட்டிகை வழக்கு எண். 120/2018 ஆக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. பின்னர் 6 வது எதிரிக்கு நீண்ட நாட்களாக அழைப்பாணை சார்பு செய்யப்படாமல் நிலுவையில் இருந்து வந்ததால் அவருக்கு எதிரான வழக்கை தனியாக பிரித்தெடுக்குமாறு வேண்டி 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.ப.ம.எண்.2545/2023 மனுதாக்கல் செய்யப்பட்டது. அம்மனு அனுமதிக்கப்பட்டு 6 வது எதிரிக்கு எதிரான வழக்கு ஆண்டுபட்டிகை வழக்குஎண்.416/2023–ல் தனியாக பிரித்தெடுக்கப்பட்டது. பின்னர் 1 முதல் 5 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் படி வழங்கப்பட்டும், போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு

240 ன் படி 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) r/w 149–ன் கீழும், 3 முதல் 5 எதிரிகள் இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324 r/w 149, 506 (ii)–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டுகளை வனைந்து எதிரிகளுக்கு புரியும்படி தமிழ் மொழியில் குற்றச்சாட்டுகளை விளக்கிக் கூறி எதிகளிடம் வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து, வழக்கு விசாரணையை எதிர் கொள்வதாக கூறி வழக்கு விசாரணைக்கு வேண்டினர். அதனால் அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய இந்நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.

**04)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆகவும், அ.சா.1 ன் மருத்துவ விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>05) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :–</u>**

**i)** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து தன்னை தகாத வார்த்தைகளால் திட்டி, செங்கல்லை எடுத்து எறிந்ததாகவும், 1 வது எதிரி குழவி கல்லை எடுத்து உச்சந்தலையில் அடித்ததாகவும், தனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதால் அ.சா.2 தன்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் தன்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டி,

கற்களை எடுத்து அ.சா.1ன் மீது எறிந்து, 1வது எதிரி குழவி கல்லால் அ.சா.1ன் உச்சந்தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், தான் அ.சா.1யை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தின் போது 2வது எதிரிக்கும், அ.சா.1க்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அப்போது 1வது எதிரி இருச்சக்கர வாகனத்தில் அங்கு வந்து குழவி கல்லை அ.சா.1ன் உச்சந்தலையில் எறிந்ததாகவும் அதில் அ.சா.1ற்கு இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். கேள்விநிலை சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் சம்பவம் தொடர்பாக கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு சென்று தனது தந்தையை பார்த்ததாகவும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் 6 இருவரும் தங்களது சாட்சியத்தில் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளனர்.

**ii)** மருத்துவசாட்சியான அ.சா.7 கடந்த 24.05.2018–ல் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது காலை 08.35 மணியளவில் 55 வயது மதிக்கத்தக்க திராவிட செல்வம் என்பவர் அவருடைய மருமகன் மகேஷ்வரன் என்பவரால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார் என்றும், அவர் கூறியதாவது அன்று காலை 07.30 மணியளவில் தன்னுடைய வீட்டின் முன்னால் வைத்து தனக்கு அடையாளம் தெரிந்த ஒரு நபர் தன்னை கல்லால் தாக்கியதாகவும், அவரை பரிசோதித்த போது உச்சந்தலையில் 3 X 0.5CM ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன் என்றும், அவருக்கு தலைக்கு சிடி ஸ்கேன் எடுத்த பார்க்கப்பட்டது என்றும், அவர் 08.06.2018ம் தேதியன்று சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்ததாகவும் சாட்சிமளித்துள்ளார்.

**iii)** இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 தனது சாட்சியத்தில் கடந்த 25..05.2018ம் தேதி 18.10 மணிக்கு அ.சா.8 கேணிக்கரை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வந்த தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த இராமநாதபுரம் கம்பர் தெருவைச்சேர்ந்த முத்துஇருளாண்டி மகன் திராவிட செல்வம் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று பின்பு நிலையம் வந்து புகார் வாக்கு மூல தன்மைக்கு ஏற்ப கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண்.126/2018 பிரிவு 147, 294(பி), 324, 506(2) இதசவாக வழக்குப்பதிவு செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 19.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அறிவுநிதி மற்றும் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 சாட்சிகளை விசாரித்து தனித்தனி வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 1 முதல் 5 எதிரிகள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்த திராவிடசெல்வன் என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் டாக்டர் மனோஜ்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய காயச்சான்று பெற்று, இத்துடன் இவ்வழகின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 324, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், தனது புலன் விசாரணையின் போது 6ம் எதிரி தலைமறைவாக இருந்ததால் அவரை தலைமறைவு

குற்றவாளி என குறிப்பிட்டு எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.8 ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**06)** அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவடைந்ததும் அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியப் பகுதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விளக்கிக்கூறி எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அரசுதரப்பு சாட்சிகள் கூறுவது பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், தாங்கள் குற்றவாளி இல்லை என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>07) தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் இருதரப்பு வாதங்களில் இருந்தும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் இருந்தும், தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) r/w 149–ன் கீழும், 3 முதல் 5 எதிரிகள் இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 294(b), 324 r/w 149, 506 (ii)–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**08)** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், அ.சா.1 முதல் அ.சா.8–ன் சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமாக எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு

நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் என வாதிட்டார்.

**<u>09) தீர்வு :-</u>**

**i)** வழக்கு சம்பவத்தின் போது, 1 முதல் 6 எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், 1வது எதிரி குழவி கல்லை எடுத்து நிகழ்நிலை புகார்தாரரின் மீது எறிந்ததாகவும், 2 மற்றும் 6வது எதிரிகள் கீழே கிடந்த கல்லை எடுத்து நிகழ்நிலை புகார்தாரரின் மீது எறிந்ததாகவும், மற்ற எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எதிரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் அனைவரும் செங்கல்லை எடுத்து தன் மீது எறிந்ததாக சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.1ன் சாட்சியம் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கு முரணாக அமைகிறது. அதே போன்று அ.சா.1 தனது முதல் விசாரணையில் *" 1வது எதிரி சுப்பிரமணியன் அருகில் கிடந்த உடைந்த குழவி கல்லை எடுத்து நான் மற்ற எதிரிகளிடம் பேசிக்கொண்டிருந்தபோது தேவிடியா பயலே இங்க ஏண்டா வந்திருக்க என்று சொல்லி* ***உச்சந்தலையில் குழவி கல்லை எடுத்து அடித்தார்."*** என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் தனது குறுக்கு விசாரணையில் ***" நேருக்கு நேர் நின்று 3ல் இருந்து 4 அடி தொலைவில் இருந்து குழவி கல்லை சுப்பிரமணியன் எறிந்தார். "*** என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.1ன் சாட்சியம் முன்னுக்கு முரணாக அமைகிறது. இதே போன்று அ.சா.1 தனது சாட்சியத்தில் ***" நான் மருத்துவமனையில் சேர்ந்து 10, 15 நிமிடங்களில் போலீசார் மருத்துவமனைக்கு வந்து விட்டார்கள் என்றால் மாலையில்தான் வந்தார்கள். "*** என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் ***" நாங்கள் மருத்துவமனைக்கு சென்றவுடன் போலீசார் கொஞ்ச நேரத்தில் அங்கு வந்துவிட்டார்கள். நேரம் சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் விசாரிக்கும் போது நான் இருந்தேன். அப்போது என்னையும் போலீசார் விசாரித்தார்கள். "*** என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் 2ன் சாட்சியங்களை உரிய கவனமுடம் பரிசீலனை செய்கையில் சம்பவம் நடைபெற்ற தேதியன்றே அதாவது

24.05.2018 ம் தேதியன்றே காவல்துறையினர் மருத்துவமனைக்கு சென்று விசாரணை செய்ததாக சாட்சியமளித்துள்ளனர் என்பது தெரியவருகிறது. அவ்வாறு தான் புகார் வாக்குமூலத்திலும் ***" இன்று 24.05.18 தேதி காலை சுமார் 07.15 மணியளவில் "*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறெனில் இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக 24.05.2018 ம் தேதியன்றே காவல்துறையினர் நிகழ்நிலை புகார்தாரரிடம் புகார் வாக்குமூலம் பெற்றுள்ளனர் என கருத இயலும். ஆனால், புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 தனது சாட்சியத்தில் கடந்த 25.05.2018–ம்தேதியன்று மாலை சுமார் 16.10 மணிக்குதான் வழக்கு சம்பவம் தொடர்பாக மருத்துவமணையில் இருந்து தனக்கு தகவல் கிடைத்ததாகவும் அதன் பின்னர் மருத்துவமனைக்கு சென்று, புகார்வாக்குமூலம் பெற்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். அவ்வாறுதான் புகார்வாக்குமூலத்தின் இரண்டாவது பக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறெனில் புகார் வாக்குமூலத்தின் முதல் பக்கத்தில் உள்ள சங்கதிகளும், புகார் வாக்மூலத்தில் இரண்டு பக்கத்தில் உள்ள தகவல்களும் முண்ணுக்கு பின் முரணாக அமைந்துள்ளது. அதே போன்று அ.சா.1, அ.சா.2 ன் சாட்சியமும் புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியமும் முண்ணுக்கு பின் முரணாக அமைகிறது. எனவே, அரசு தரப்பு வழக்கானது மிகுந்த சந்தேகத்திற்குள்ளாகிறது.

**ii)** வழக்கு சம்பவத்தின்போது, 1 முதல் 6 எதிரிகள் ஒன்று சேர்ந்து நிகழ்நிலை புகார்தாரான அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றுதான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 சிகிச்சைக்காக மருத்துமனைக்கு சென்ற போது தன்னை தெரிந்த ஒரு நபர் தாக்கியதாக மட்டும்தான் மருத்துவரிடம் சொல்லியுள்ளார் என்பது அ.சா.ஆ. 4 சான்றாவணத்தின் மூலமாக தெரிய வருகிறது. அவ்வாறுதான் மருத்துவரான அ.சா.7 தனது சாட்சியத்தில் ***" அவர் கூறியதாவது அன்று காலை 07.30 மணியளவில் தன்னுடைய வீட்டின் முன்னால் வைத்து தனக்கு அடையாளம் தெரிந்த ஒரு நபர் தன்னை கல்லால் தாக்கியதாக தெரிவித்தார். '*** என்று சாட்சியமளித்துள்ளார்.

அவ்வாறெனில் அ.சா.ஆ.4 சான்றாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளும், அ.சா.7 ன் சாட்சியமும் அ.சா.ஆ.1 சான்றாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளும், அ.சா.1 ன் சாட்சியமும் முரணாக அமைகிறது. அதே போன்று இந்த வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. இது தொடர்பாக புலன்விாரணை அதிகாரியான அ.சா.8 தனது சாட்சியத்தில் '' ***இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் குழவிக்கல் அல்லது செங்கல் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். "*** என்று சாட்சியமளித்துள்ளார். மேலும், வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் தனக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை. எனவே, அரசு தரப்பு வழக்கு சந்தேகத்திற்குள்ளாகிறது.

**iii)** இவ்வாறான சூழ்நிலையில் எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரிகளின் குடும்பத்தினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளுக்கு எதிராக கேணிக்கரை காவல்நிலைய குற்ற எண்.125/2018–ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும், எதிரிகளுக்கும் அ.சா.1 ன் குடும்பத்திற்கும் இடையே நிலம் தொடர்பாக முன் விரோதம் இருந்து வருவதால் எதிரிகளை பழிவாங்க வேண்டுமென்ற கெட்ட நோக்கத்திலும் அ.சா.1 பொய்யாக சங்கதிகளை குறிப்பிட்டு புகார் அளித்துள்ளார் என்றும் அ.சா.1 முதல் 5 சாட்சிகள் நெருங்கிய உறவினர்கள் என்றும் எனவே அவர்களது சாட்சியங்களை மட்டும் அடிப்படையாக கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டதாக கருத இயலாது என்றும் வாதிட்டார். எனவே, இது தொடர்பாக பரிசீலனை செய்கையில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 தனது குறுக்கு விசாரணையில் ***" இந்த வழக்கின் 2ம் எதிரியின் அக்கா திருமதி.மாரி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3க்கு எதிராக குற்ற எண்.125/2018–ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். "*** என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மகனான அ.சா.4 தனது சாட்சியத்தில் ***" நிலம் சம்மந்தமாக எதிரிகளுக்கும், எங்களுக்கும் முன்விரோதம்***

***இருந்து வந்தது."*** என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் ***" அ.சா.1 எனது மாமா ஆவார். "*** என்றும், அ.சா.4 தனது சாட்சியத்தில் ***" அ.சா.1 எனது அப்பா ஆவார். "*** என்றும், அ.சா.5 தனது சாட்சியத்தில் ***" அ.சா.1 எனது தந்தை என்றால் சரிதான். "*** என்றும் சாட்சியமளித்துள்ளனர். மேற்கண்ட சாட்சியங்களையும், வழக்காவணங்களையும் உரிய கவனமுடன் பரிசீலனை செய்கையில் எதிரிகளின் குடும்பத்தினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.சா.1 முதல் 3 சாட்சிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், எதிரிகளின் குடும்பத்திற்கும், அ.சா.1ன் குடும்பத்திற்கும் இடையே நிலம் தொடர்பாக முன்விரோதம் இருந்து வருகிறது என்பதும், அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதும், அ.சா.3 மற்றும் அ.சா.6 அ.சா.5ன் நண்பர்கள் என்பதும், அ.சா.2 அ.சா.1ன் நெருங்கிய உறவினர் என்பதும் தெரியவருகிறது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.5ன் சாட்சியங்களை மட்டும் அடிப்படையாக கொண்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டதாக கருத இயலாது என்ற எதிரிகளின் தரப்பு வழக்கறிஞரின் வாதம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது என்பதால் அவர்களது சாட்சியங்கள் பிற சாட்சியம், சான்றாவணங்கள் மூலமாக உறுதி செய்யப்படவேண்டும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த வழக்கில் சுதந்திர சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்களா என்பது பற்றி பரிசீலணை செய்கையில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் ***" சம்பவ இடத்திற்கு அருகே நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சண்டையை நிறைய நபர்கள் பார்த்தார்கள் என்றால் சரிதான். "*** என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் இந்த வழக்கில் சுதந்திர சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. அவ்வாறு விசாரணை செய்யாததற்கான காரணம் எதுவும் அரசு தரப்பில் முன் வைக்கப்படவில்லை. எனவே அரசு தரப்பு வழக்கானது மிகுந்த சந்தேகத்திற்குள்ளாகிறது.

**iv)** இவ்வாறான சூழ்நிலையில் எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அ.சா.1 சாட்சிதான் எதிரிகளின் வீட்டிற்கு வந்து தகராறு செய்தார் என

வாதிட்டார். எனவே, இது தொடர்பாக பரிசீலனை செய்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் ***" கடந்த 21.05.2018 ன் தேதி எனது இடத்தை மாரி என்பவருக்கு பத்திரபதிவு செய்து கொடுத்தேன். "*** என்றும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் ***" அ.சா.1 ஒப்பந்தத்தின்படி நிலத்தை விற்காததால் தான் மேற்படி வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஒப்பந்தத்தின்படி அ.சா.1 40 இலட்சத்தை முன் பணமாக வாங்கி கொண்டு வீட்டை எழுதிக்கொடுக்காததால் தான் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்ப்பட்டது என்றால் சரிதான். விற்ற பிறகு ஏன் எனது வீட்டிற்கு வருகிறாய் என்பதுதான் அவர்களுக்குள் இருந்த பிரச்சனை என்றால் சரிதான். "*** என்றும் சாட்சியமளித்துள்ளனர். அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்களை உரிய கவனமுடன் பரிசீலனை செய்கையில் அ.சா.1 எதிரிகளின் குடும்பத்திற்கு நிலத்தை விற்பனை செய்த பின்னர் அங்கு உள்ள கழிவுநீர் தொட்டியை எதற்காக அ.சா.1 சுத்தம் செய்ய முற்பட்டார் என்பது தொடர்பாக அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் முன்வைக்கப்படவில்லை. எனவே, அ.சா.1 தான் எதிரிகளின் வீட்டிற்கு வந்து எதிரிகளிடம் தகராறு செய்தார் என்ற எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னுடன் தொழிலாளர்களை அழைத்துச் சென்றதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அந்த தொழிலாளர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை. எனவே அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்குள்ளாகிறது.

**v)** இவ்வாறான சூழ்நிலையில் அ.சா.2 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.2 தனது முதல் விசாரணையில் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் தனது குறுக்கு விசாரணையில் ***" நான் மாமியார் வீட்டிற்கு வந்திருந்த போதுதான் சம்பவத்தை பார்த்தேன் என்றால் இல்லை கேள்விப்பட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன். "*** என்றும், ***'' எனக்கு யார் தகவல் சொன்னது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. "*** என்றும் சாட்சியமளித்துள்ளார். அவ்வாறெனில் அ.சா.2 ன் சாட்சியம் முண்ணுக்கு பின் முரணாக அமைகிறது.

**vi)** இவ்வாறான சூழ்நிலையில் அ.சா3 ன் சாட்சியத்தை பரிசீலணை செய்கையில் அ.சா.3 தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தின் போது 2 வது எதிரிக்கும் அ.சா.1 ற்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், 1 வது எதிரி குழவி கல்லால் தாக்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரிகள் தகாத வார்த்தைகளால் அ.சா.1 யை திட்டியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியமளிக்கவில்லை. மேலும், வழக்கு சம்பவத்தின் போது, 1 மற்றும் 2 எதிரிகளை தவிர பிற எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்ததாகவோ, வழக்கு சம்வத்தில் ஈடுபட்டதாகவோ சாட்சியமளிக்கவில்லை. மேலும் அ.சா.3 தனது குறுக்குவிசாரணையில் ***" சண்டை எவ்வளவு நேரமாக நடக்கிறது என்பதை பற்றியும், யார் யார் சண்டையில் இருந்தார்கள் என்பதை பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். "*** என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்குள்ளாகிறது.

**vii)** இவ்வாறான சூழ்நிலையில் அ.சா.4 ன் சாட்சியத்தை பரிசீலணை செய்கையில் அ.சா.4 தனது குறுக்குவிசாரணையில் ***" சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், போன் மூலம் சம்பவத்தை பற்றி எனக்கு தகவல் வந்தது என்றாலும் சரிதான். "*** என்று சாட்சியமளித்துள்ளார். அவ்வாறெனில் அ.சா.4 வழக்கு சம்பவம் தொடர்பாக கேள்வி நிலை சாட்சியம் என்பதால் அவரது சாட்சியம் இந்த வழக்கில் எவ்வித முக்கியத்துவமும் பெறவில்லை.

**viii)** மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **S.Ganesan vs Ramaraghuraman and others reported in 2011-2-SCC-83** என்ற வழக்கில்

> " *Every accused is presumed to be innocent unless his guilt is proved. the presumption of innocence is a human right. Subject to the statutory exceptions, the said principle forms the basis of criminal jurisprudence in India.*" என்று தீர்ப்பளித்துள்ளது.

மேற்கண்ட முன் தீர்ப்பை உரிய கவனமுடன் பரிசீலனை செய்கையில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படும் வரை எதிரிகள் நிரபராதிகள் என்று தான் அனுமானம் செய்யவேண்டும் என்பது தெரியவருகிறது.

**ix)** பரிசீலனைக்குட்பட்ட இவ்வழக்கில் வழக்கு சம்பவம் தொடர்பாக எந்த தேதியில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்ற சங்கதி முண்ணுக்கு பின் முரணாக அமைந்துள்ளது என்பதாலும், எதிரிகளின் குடும்பத்தினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளுக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதாலும், அ.சா.1ன் குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே நிலம் தொடர்பாக முன்விரோதம் இருந்து வருகிறது என்பதாலும், அ.சா.1, 4 மற்றும் 5 ஒரே குடும்பத்தை சார்ந்த நபர்கள் என்பதாலும், அவர்களது சாட்சியங்களை மட்டும் வைத்து அடிப்படையாக கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டதாக கருத இயலாது என்பதாலும், அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக அமைந்துள்ளது என்பதாலும், அ.சா.1, 2ன் சாட்சியங்கள் அ.சா.8ன் சாட்சியத்திற்கும், அ.சா.ஆ.1 மற்றும் 5 சான்றாவணங்களுக்கும் முரணாக அமைந்துள்ளது என்பதாலும், அ.சா.4 கேள்விநிலை சாட்சி என்பதால் அவரது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதாலும், பார்வை மகஜர் சாட்சிகள் வழக்கு சம்பவம் தொடர்பான சாட்சிகள் அல்ல என்பதாலும், இந்த வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதாலும், அ.சா.7–ன் சாட்சியமும், அ.சா.ஆ. 4 சான்றாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதியும் அ.சா.ஆ.1 மற்றும் 5 சான்றாவணங்களுக்கு முரணாக அமைந்துள்ளது என்பதாலும், இந்த வழக்கில் சுதந்திர சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை என்பதாலும் அரசு தரப்பு வழக்கானது மிகுந்த சந்தேகத்திற்குள்ளாகிறது.

**x)** எனவே 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) உ/இ 149–ன் கீழான குற்றச்சாட்டுகள் மற்றும் 3 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 148, 294(b), 324 உ/இ 149, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் உரிய சாட்சிய, சான்றவணங்கள் மூலமாக தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி மேற்கண்ட குற்றச்சாட்டுகளில் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10)** இறுதியாக, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) உ/இ 149–ன் கீழான குற்றச்சாட்டுகள் மற்றும் 3 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 148, 294(b), 324 உ/இ 149, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளில் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து 1 முதல் 5 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) உ/இ 271 (1) BNSS பிரிவின் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 1 முதல் 5 எதிரிகளின் பிணையப்பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு 1 முதல் 5 எதிரிகளின் பிணையபத்திரம் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் சொத்து குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் என் முன்பாக நேரடியாக நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ம் நாள், செவ்வாய்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.08.04 19:50:17 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்.

**1. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகள் | பெயர் |
|---|---|---|
| 01. | அ.சா.1 | திரு. திராவிடச் செல்வன் (நிகழ்நிலை புகார்தாரர்) |
| 02. | அ.சா.2 | திரு. மகேஷ் (கண்ணுற்ற சாட்சி) |
| 03. | அ.சா.3 | திரு. சங்கர் (கண்ணுற்ற சாட்சி) |
| 04. | அ.சா.4 | திரு. ரகுவர்மன் (கேள்விப்பட்ட சாட்சி) |
| 05. | அ.சா.5 | திரு. அறிவு நிதி (பார்வை மகஜர் சாட்சி) |
| 06. | அ.சா.6 | திரு. முத்துக்குமார் (பார்வை மகஜர் சாட்சி) |
| 07. | அ.சா.7 | திரு. மனோஜ்குமார் (மருத்துவர்) |
| 08. | அ.சா.8 | திரு. ஜீவரத்தினம்(புலன்விசாரணை அதிகாரி) |

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவணங்கள் | தேதி | விபரம் | யார் மூலமாக குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 24.05.2018 | புகார்வாக்குமூலம் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 24.05.2018 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் அறிவேன் சாட்சி கையொப்பம். | அ.சா.4 |
| 3. | அ.சா.ஆ.3 | 25.05.2018 | பார்வை மகஜர் | அ.சா.5 |
| 4. | அ.சா.ஆ.4 | 24.05.2018 | மருத்துவ விபத்து பதிவேடு | அ.சா.7 |
| 5. | அ.சா.ஆ.5 | 25.05.2018 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| 6. | அ.சா.ஆ.6 | 25.05.2018 | மாதிரி வரைபடம் | அ.சா.8 |

3. **அரசு தரப்பில் சான்றுபொருட்கள்** – இல்லை

**4. <u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u> –** இல்லை

**5. <u>குறிப்பு</u>**

1. 1 முதல் 5 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.
2. 1 முதல் 5 எதிரிகள் விசாரணைக் காலத்தில் பிணையில் இருந்தனர்.
3. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.08.04 19:50:29 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்

**நகல்–மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமநாதபுரம், அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**